# பாண்டியர்கால ஆட்சி இயல்

நடன. காசிநாதன்

## சங்ககாலப் பாண்டியர்

முடியுடை மூவேந்தர்களில் ஒருவரான பாண்டியர் சங்ககாலம் தொட்டே தமிழகத்தின் தென்பகுதியைச் சிறப்புற ஆண்டுவந்திருக்கின்றனர். சங்ககாலத்துப் பாண்டிய மன்னர்களின் ஆட்சி இயல்பற்றி சங்க கால இலக்கியங்கள்வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம். அது பலராலும் ஆராயப்பெற்று எழுதப்பெற்றுள்ள ஒன்றாகும்.

## பிற்காலப் பாண்டியர்

கி. பி. 6 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 14 ஆம் நூற்றாண்டு முடிய ஆண்ட பாண்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சி இயலை எவ்வாறு அமைத்திருந்தார்கள் என்பதை ஆராய்வது மிகவும் இன்றியமையாததாகிறது.

## ஆட்சியின் சாயல்

கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து மூன்றாம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்த சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் ஆட்சி இயலின் சாயல் இந்தப் பிற்காலப் பாண்டிய மன்னர்களில் எந்த அளவுக்குப் பார்க்கமுடிகிறது; தங்களின் சமகாலத்தில் ஆட்சி புரிந்த பல்லவர், சோழர்கால ஆட்சி இயல் கூறுகள் எந்த அளவுக்குப் பாண்டியர்களின் ஆட்சி இயலில் ஆதிக்கம் செலுத்திற்று என்பவற்றைக் கண்டால்தான் பாண்டியர்கால ஆட்சி இயலை முழுமையாக ஆராய்ந்ததாகக் கருதலாம்.

## இருபிரிவினராகப் பகுத்தல்

கி. பி. 6 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 14 ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட பாண்டிய மன்னர்களையே இருபிரிவினராகப் பிரித்து ஒரு பிரிவினர் கி. பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டவர் என்றும், மற்றொரு பிரிவினர் கி. பி. 10 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 14 ஆம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்தவர்கள் என்றும் கொள்ளலாம்.

## அடிப்படை ஆதாரங்கள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் மொத்தம் 12 பேர் (சிலர் 14 பேர்) இருந்திருக்கின்றனர். அவர்களில் முதலாமவன் கடுங்கோன் என்பானாவான். இறுதியில் ஆண்டவர் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன். இந்தப் பிரிவைச் சார்ந்த மன்னர்களைப்பற்றி அறிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஓரளவுக்குத் துணைபுரிகின்றன. தமிழிலக்கியமான பாண்டிக்கோவையும் சில செய்திகளைத் தருகிறது.

செப்பேடுகள்:

இதுவரை மொத்தம் ஆறு செப்பேடுகள் கிடைத்துள்ளன. அவை வருமாறு:

1. வேள்விக் குடிச் செப்பேடு[1]
2. சீவரமங்கலம் அல்லது சென்னை அருங்காட்சியகச் செப்பேடு[2]
3. சின்னமனூர்ச் சிறிய செப்பேடு[3]
4. தளவாய்புரச் செப்பேடு[4]
5. சின்னமனூர்ப் பெரிய செப்பேடு[5]
6. சிவகாசிச் செப்பேடு[6]

முதல் மூன்று செப்பேடுகளும் ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ் சடையன் காலத்தைச் சார்ந்தவை. தளவாய்புரச் செப்பேடு பராந்தக வீரநாராயணன் காலத்தியது. சின்னமனூர்ப் பெரிய செப்பேடு இரண்டாம் இராஜசிம்மன் காலத்தைச் சார்ந்தது. இந்த இராஜசிம்மன்தான் சோழ மன்னன் பராந்தகனோடு போரிட்டுத் தோற்றவன். சிவகாசிச் செப்பேடு வீரபாண்டியன் காலத்தைச் சார்ந்தது. இவ்வீரபாண்டியன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என்று சிலராலும்[7] முதலாம் இராசாதி ராசனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னன் இவன் ஆகையினால் முதலாம் இராசாதிராசன் காலத்தியவன் என்று சிலராலும் கருதப்படு கின்றான். முடிவாகக் கி. பி. 11 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பாண்டியன் இவன் என்று இப்பொழுது எல்லாரும் கருதுகிறார்கள்.

கல்வெட்டுகள்:

பாண்டிய மன்னர்கள் காலத்தியக் கல்வெட்டுகள் இதுவரையில் சுமார் 350 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்தியது சுமார் 150 ஆகும். இந்தக் காலத்தியக் கல் வெட்டுகளுள் சில அப்பொழுது ஆண்ட மன்னர்களின் காலத்தை அறிந்து கொள்வதற்குப் பெரும் துணை புரிகின்றன. அத்தகைய கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கவை,

1. பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டு.[8]
2. இரண்டாம் வரகுணவர்மனின் அய்யம்பாளையக் கல்வெட்டு.[9]
3. மாறவர்மன் அரிகேசரியின் வைகைக் கல்வெட்டு.[10]

முதல் கல்வெட்டில் கலி ஆண்டு 3871 குறிக்கப்பட்டுள்ளது. இது கி. பி. 770 க்குச் சமமாகும். இந்தக் காலத்தில் பராந்தக நெடுஞ்சடையன் ஆண்டுள்ளான் என்பது உறுதியாகிறது. இரண்டாம் கல்வெட்டில் சக ஆண்டு 792, 2 ஆம் வரகுண பாண்டியனின் எட்டாம் ஆட்சி ஆண்டும் தரப்பட்டுள்ளன. சகஆண்டு 792 க்குச் சமம் கி. பி. 870. கி. பி. 870 என்பது வரகுணனின் 8 ஆம் ஆட்சி ஆண்டாகும். அவ்வாறெனின் வரகுணன் கி. பி. 862-63 இல் பட்டமேற்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. மூன்றும் கல்வெட்டு மாறவர்மன் அரிகேசரி 50 ஆண்டுகள் ஆண்டான் என்பதைத் தெரிவிக்கிறது. இத்தகைய கல்வெட்டுகளாலும் மற்றும்

பாண்டியர்களின் சமகாலத்திய மன்னர்களின் கல்வெட்டுகளாலும் இக்காலத்தியப் பாண்டிய மன்னர்களின் காலத்தை அறிந்துகொள்வது எளிதாகிறது.

இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களைப்பற்றி ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆனால் இதுவரையில் இம்மன்னர்கள் காலத்திய செப்பேட்டுச் சாசனங்கள் மிகக் குறைந்த அளவிலே கிடைத்திருக்கின்றன. தஞ்சையையும் உறந்தையையும் செந்தழலில் கொளுத்திய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும், நெல்லூர் கடப்பைப் பகுதி வரையில் படையெடுத்து வெற்றிவாகை சூடிய முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் தங்கள் காலத்தில் எந்தவொரு செப்புப்பட்டயமும் வெளியிடாமலா போயிருப்பார்கள். அவர்கள் காலத்திய கல்வெட்டுகள் ஏராளமாகக் காணப்படுகையில் அவர்கள் காலத்தியச் செப்பேடுகள் மட்டும் ஏன் கிடைக்கவில்லை. மண்ணுள் புதைந்து இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளனவா? ஆராயப்படுதல் வேண்டும்.

இந்தப் பிரிவு பாண்டிய மன்னர்கள் காலத்தியக் கல்வெட்டுகள், காலத்தைப்பற்றிக் கணிப்பதற்கு உதவியாக உள்ளன. அவைகளில் கல்வெட்டு எழுதியபோது இருந்த கோள் நிலைகள் குறிக்கப்பட்டு இருப்பதால் அக்கல்வெட்டுகளின் காலத்தைக் கணிப்பது எளிதாகக் காணப்படுகின்றன.

## ஆய் மன்னர்களின் செப்பேடுகளும், கல்வெட்டுகளும்

முதல் பிரிவைச் சார்ந்த பாண்டிய மன்னர்கள் காலத்தில் அவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக ஆய் மன்னர்கள் இருந்திருக்கின்றனர். அதே நேரத்தில் அவர்கள் தாங்களாகவே செப்பேடுகளை வெளியிட்டுள்ளார்கள். அந்தச் செப்பேடுகளும்[11] அவர்கள் காலத்தியக் கல்வெட்டுகளும் முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களை, குறிப்பாக சடையவர்மன் பராந்தக நெடுஞ்சடையனைப்பற்றி அறிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

## பாண்டிய நாடு

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்திலாயினும் சரி, இரண்டாம்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்திலாயினும் சரி பாண்டியர்களின் ஆட்சி ஆந்திராவில் உள்ள நெல்லூர் ஜில்லாவைத் தாண்டி வடக்கே செல்லவில்லை. அங்கங்கு வலிவான அரசுகள் அமைந்துவிட்டதே அதற்குக் காரணம். முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்தில் தொண்டை மண்டலத்தில் பல்லவர்களது ஆட்சி வலிமை பெற்றுத் திகழ்ந்தது. பாண்டியர்கள் நாடு விரிவடையவொட்டாமற் தடுத்துவிட்டது. இரண்டாம்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்தில் சோமேசுவரத்தைத் தலைநகராகக் கொண்டிலங்கிய போசளர்களின் செல்வாக்கு பாண்டியர்களது ஆட்சி நெல்லூரைத் தாண்டிப் பரவ விடாமல் முடக்கியிருக்கலாம்.

## பாண்டியர் அரசுகட்டிலேறுமுறை

முதற்பிரிவைச் சார்ந்த மன்னர்கள் தந்தைக்குப்பின் மகன் பட்டமேற்றிருக்கிறான் என்ற செய்தி அவர்கள் காலத்தியச் செப்பேடுகள்மூலமாக உணரமுடிகிறது. தங்களது முன்னோர்களின் ஆட்சிச் சிறப்பைக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதியில்[12] ஒருவரின் வீரச் செயல்களைக் கூறி முடித்தவுடன் ''மற்றவர்க்கு மகனாகி'', ''மற்றவர்க்குப் பழிப்பின்றி வழித் தோன்றி''என்று அடுத்தவரைப்பற்றிக் கூற ஆரம்பிப்பதால் முன்னவரின் மைந்தன் அடுத்தவர் என்று உறுதியாகத் தெரிகிறது. ஆகவே அவர்கள் தந்தைக்குப்பின் மகன் என்ற முறையில் அரசுகட்டிலேறி ஆட்சி புரிந்திருக்கின்றனர் என்று அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இரண்டாம் பிரிவைச் சார்ந்த மன்னர்கள் எந்த முறையில் அரியணை ஏறினார்கள் என்று அறிதல் இயலாததாக உள்ளது. அவர்கள் காலத்தியக் கல்வெட்டுகளும் இதுபற்றிச் சரியாகத் தெரிவிக்கவில்லை. இரண்டாம் பிரிவைச் சார்ந்த பாண்டியர்கள் ஒவ்வொருவரும் எத்தகைய உறவு உடையவர்கள் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. அப்பாண்டிய மன்னர்களின் சமகாலத்திய மன்னர்களை வைத்துத்தான் இவருக்குப் பிறகு இவர் பட்டமேற்றிருக்கவேண்டும் என்று உணர முடிகிறது. தந்தைக்குப்பின் மகன்தான் பட்டமேற்றானா அல்லது அண்ணனுக்குப் பிறகு தம்பி பட்டமேற்று பின்னர் அண்ணன் மகன் பட்டமேற்றானா அல்லது தம்பி மகன் பட்டமேற்றானா என்று அறிய முடியாத சிக்கலான பிரச்சினையாக உள்ளது.

## அரசர்கள் பட்டப்பெயர்கள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் நிரம்பப் பட்டப் பெயர்களைச் சூட்டிக்கொண்டு திகழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் பெரும்பாலான பட்டப்பெயர்கள் வடமொழிப் பெயர்களாகக் காட்சி அளிக்கின்றன.[13] அதற்குக் காரணம், அவர்களின் சமகாலத்தவரான பல்லவ மன்னர்கள் வடமொழிப் பட்டப் பெயர்களை நிரம்பப் பூண்டவர்கள். எனவே அவர்களைப் பார்த்து இவர்களும் அம்மாதிரிப் பூண்டிருக்கலாம். மாறவர்மன், சடையவர்மன் என்று மாறிமாறிச் சூட்டிக்கொள்ளும் அந்த முறையும் பல்லவர்களால்தான் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் தமிழகத்தில் முதன்முதலில் வர்மன் என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொண்டவர்கள் பல்லவ மன்னர்களே. சிம்மவர்மன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்றவை உதாரணங்கள் ஆகும். 'வர்மர்' என்பது க்ஷத்திரிய மன்னர்களைக் குறிக்கும் வடமொழிச் சொல். இதைப் பன்பர் என்று தமிழ்ப்படுத்தி எழுதியுள்ளமை தமிழ்க்கல்வெட்டுகளில் பலகிக் காணப்படுகிறது.

இரண்டாம் பிரிவைச் சார்ந்த பாண்டிய மன்னர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பட்டப் பெயர்களையே பூண்டிருந்திருக்கின்றனர். உதாரணமாகச் 'சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்' என்று முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும், 'எல்லாந் தலையானான்', 'எம்மண்டலமும் கொண்டருளிய சேரனைவென்றான்' போன்ற பட்டப்பெயர்களை முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் பெற்றிருந்தார்கள். இவர்கள் மிகக் குறைவான வடமொழிப் பட்டப்பெயர்களைப் பூண்டிருந்தனர்.

## அரியணையின் பெயர்கள்

கி.பி. 10 ஆம் நூற்றாண்டிருந்து ஆண்ட பாண்டிய மன்னர்களில் சிலர் எந்த அரசுகட்டிலில் அமர்ந்து ஆட்சிபுரிந்தனர் என்பதைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியர்களின் அரியணைகளுக்கு மழவராயன், காலிங்கராயன்[14] என்ற பெயர்கள் வழங்கிவந்தன. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் அரியணைகளுக்கு மழவராயன், பல்லவராயன்[15] என்னும் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன என்பது கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. இதுமாதிரி அரியணைகளுக்குப் பெயரிட்டழைக்கும் வழக்கம் இவர்களுக்குமுன் ஆண்ட எந்த மன்னர்களும் கையாளாத புதுப் பழக்கமாகத் தெரிகிறது.

## மெய்க்கீர்த்திகள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் தங்களுக்கென்று எந்தவொரு மெய்க்கீர்த்தியும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் சமகாலத்தவர்களான பல்லவ வேந்தர்களும் தங்களுக்கென்று தனியானதொரு மெய்க்கீர்த்தி கொண்டிருக்கவில்லை. ஆனால் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் மெய்க்கீர்த்தி எழுதியிருக்கின்றார்கள். இப் பழக்கம் சோழர்களின் தொடர்பால் ஏற்பட்டிருக்கவேண்டும். முதற் பிரிவைச் சார்ந்த பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளிலும், சில கல் வெட்டுகளிலும் தங்களைப்பற்றியும் தங்கள் முன்னோர்களைப்பற்றியும் சில செய்திகள் மெய்க்கீர்த்தி முறையில் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை முழுமையான மெய்க்கீர்த்தி அளவில் இல்லை.

## ஆட்சி ஆண்டு

பாண்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சி ஆண்டைக் குறிக்கும் முறை புதுமையாக உள்ளது. அவர்கள் ஒரு ஆண்டைக் குறித்து அந்த ஆண்டுக் கெதிராமாண்டு என்று குறிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆண்டைக் குறித்து ஆண்டுக்கெதிராமாண்டும் கொடுக்கப்பட்டிருக்கும்போது அந்த எதிராமாண்டை முன்னால் உள்ள ஆண்டோடு கூட்டுவதா அல்லது பெருக்குவதா என்ற ஐயத்தை உண்டாக்கியது. சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் சமஸ்கிருதப் பகுதியில் மன்னனின் 16 ஆம் ஆட்சி ஆண்டு என்றும், தமிழ்ப் பகுதியில் ''ராஜ்யவருஷம் இரண்டாவதினெதிர் பதினான்காம் யாண்டில்'' என்றும்[16] குறிப்பிடப்பட்டுள்ளதால் எதிராமாண்டை முன்னால் உள்ள ஆண்டோடு சேர்க்க வேண்டும் என்று அறியமுடிகிறது. செப்பேடுகளில் 'ராஜ்ய வருஷம்' என்று காணப்படுகிறது. இதன்மூலம் கல்வெட்டுகளில் காணப்படும் ஆண்டு ஒவ்வொரு மன்னரின் ஆட்சி ஆண்டைத்தான் குறிப்பிடுகின்றது என்று திடமாகக் கொள்ள முடிகிறது. சில பாண்டிய மன்னர்கள் ஒரு குறிப்பிட்ட ஆண்டிலிருந்து இத்தனையாவது எதிராமாண்டு என்று குறிக்கின்றனர். இரண்டாம் வரகுண பாண்டியனின் பெரும்பாலான கல்வெட்டுகள் யாண்டு நான்கு இதனெதிர் அந்தந்த ஆண்டு என்று காணப்படும்.[17] இரண்டாம் இராஜசிம்மனின் பெரும்பாலான கல்வெட்டுகள் யாண்டு இரண்டு இதனெதிர் அந்தந்த ஆண்டைக் காணலாம்.[18] பாண்டியர்களின் தொடர்

பால் சோழமன்னர்கள் சிலருங்கூடத் தங்கள் ஆட்சி ஆண்டை இன்ன ஆண்டின் எதிராமாண்டு என்று குறித்துள்ளனர்.[19]

### முடி கவித்தல்

மன்னர்கள் முடிசூட்டிக் கொள்வதைக் கல்வெட்டுகள் 'முடி கவித்தல்' என்றும் குறிக்கின்றன. தன்னுடைய தமிழ்க்கூடலில் ''மன்னிய மணி முடி கவித்து மஹாபிஷேக மகிழ்ந்த நாளில்'' என்று வீரபாண்டியன் முடிசூட்டிக் கொண்டதைச் சிவகாசிச் செப்பேடுகள் [20] கூறுகின்றன. பொன் மணி முடி சூடுகின்ற நாளில் சில வரிகளை நீக்கி உத்தரவிடுவதும் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

### அரசமாதேவியர்

பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் இருந்ததைப் போன்ற உயர்நிலை அரசியர்களுக்குப் பாண்டிய நாட்டில் இருக்கவில்லை போன்று தோன்றுகின்றது. பல்லவர் குலத்தில் சாருதேவியும் இரங்க பதாகையும், சோழர் காலத்தில் சேரமாதேவியும் குந்தவையும் அடைந்திருந்த பெரும் செல்வாக்கு பாண்டியர் காலத்தில் இருந்த எந்த ஒரு அரசியும் பெற்றிருந்ததாக அறிய முடியவில்லை. அரசிகளின் பெயர்களையே அதிக அளவில் தெரிந்துகொள்ள முடியவில்லை. மன்னன் எந்த அரசமாதேவியோடு வீரசிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்தான் என்பதைச் சோழர் காலத்துமெய்க்கீர்த்திப் பகுதியின் இறுதிப்பகுதி விளக்கும். ஆனால் இரண்டாம்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகளில் எல்லா மெய்க்கீர்த்திகளுமே உலகமுழுதுமுடையாளோடு வீற்றிருந்தருளி என்றுதான் குறிப்பிடுகின்றன. வீரபாண்டியன் மெய்க்கீர்த்திமட்டும் ''த்ரைலோகய முழுதுண்டையாளோடும் வீற்றிருந்தருளி'' என்று கூறுகிறது.[21] த்ரைலோகமுழுதுடையாள் என்பது மூவுலக முழுவதுடையாள் என்று பொருள். இதுவும் உலகமுழுதுடையாளையே குறிப்பதாகக் கொண்டால் தவருக இருக்காது. உலகமுழுதுடையாள் என்று குறிப்பிடுவது பொதுவாகப் பட்டத்தரசியைக் குறிப்பதாகக் கொள்ளலாமேயொழிய ஒரு குறிப்பிட்ட மன்னனுக்குரிய பட்டத்தரசி அவள் என்று கூறுவது பொருந்தாததாகத் தோன்றுகிறது.[22]

### அரசு அதிகாரிகள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்காலத்தில் ஒரு சில அதிகாரிகளையே செப்பேடுகள் மூலமாகவும் கல்வெட்டுகள் மூலமாகவும் உணரமுடிகின்றன. உத்தரமந்திரி ஆணத்தி, செப்பேட்டை எழுதியவன் ஆகியவர்கள் குறிப்பிடப்படுகிருர்கள். இம்முறை பல்லவர் காலச் செப்பேடுகளில் காணப்படுவதைப் போன்று உள்ளது.[23] சடையவர்மனின் வேள்விக்குடிச் செப்பேட்டில் ஆணத்தியாகக் ''கரவந்தபுரத்தவர் குலத்தோன்றல் மாவேந்தும் கடற்ருனை மூவேந்தமங்கலப் பேரரையனுகிய வைத்ய சிகாமணி மாறங்காரி'' என்று எழுதப்பட்டுள்ளது.[24] ஸ்ரீவரமங்கலச் செப்பேட்டில் ''ஆணத்தியாய்த் தாம்ர ஸாஸனஞ் செய்வித்தான் வாத்யகோஷ ஸங்கீதங்களான மலிவெய்திய வண்களந்தை வைத்ய குலம் விளங்கத் தோன்றி மன்ன

வர்க்கு மஹாசாமந்தனாய் மாற்றரசரை வலிதுலைக்கும் வீரமங்கலப் பேரரசனாகிய ஸ்ரீதரன் மூர்த்தி எயினன்''[25] என்று சொல்லப்பட்டுள்ளது. இச்செப்பேடு நிலத்தின் எல்லையை வரையறை செய்வதற்காகப் பெண் யானைமீது அமர்ந்து சுற்றிவந்தவன் ''பாண்டியர்க்கு மதங்கஜாத்யஸ பாண்டி இளங்கோ மங்கலப் பேரரசனாகிய கொழுவூர்க் கூற்றத்துக் கொழுவூர்ச் சங்கஞ்சிரீதரன்'' என்றும் தெரிவிக்கிறது.[26]

சடையவர்மன் பராந்தக நெடுஞ்சடையனின் சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டில் ''இதற்காணத்தி பட்டான் அண்டநாட்டுக் குண்டூர்க் கூற்றத்து குண்டுருத்தர மந்திரியாயின தாயன்சிங்கன்''[27] என்று உத்தர மந்திரியே அச்செப்பேட்டுக்கு ஆணத்தியாக இருந்தான் என்பதைத் தெரிவிக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் பள்ளிமடத்திலிருந்து கிடைத்திருக்கின்ற ஒரு துண்டுக் கல்வெட்டு சோழன் தலைக்கொண்ட வீரபாண்டியனைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. அதில் இளையபள்ளி தென்னவன் உத்தரமந்திரி என்பான் நிலத்தின் எல்லையைத் தெரிவிக்கும் சூழ்நிலையில் குறிக்கப்படுகிறான்.[28]

தளவாய்புரச் செப்பேடு ''இதனுக் காணத்தி வண்டமிழ்க் கோனதிகாரி பொற்றடம்பூண் மணிமார்பன் பொழிற் புல்லூ ரெழில் முஸ"ரன். ......வாத்ஸகோத்ர சூடாமணி திருமகிழியானக்கன்'' என்று தெரிவிக்கிறது.[29] அதே செப்பேடு சேந்தங்கிழவன் என்பவன் நடுவுநிலை நாயகனாக விளங்கினான் என்றும் கூறுகிறது.[30] சின்னமனூர்ப் பெரியசாசனம் வேம்பற்றூர் கூற்றங்கோன் ஆளாகவும், கூரக்குமரன் குடி காவல் நாயகனாகவும், நக்கங்காடன், பட்டாரஞ்சோலை, கோன்வேளான் ஆகியோர் கணக்கராகவும் விளங்கினர் என்று புலப்படுத்துகிறது.[31] வேம்பற்றூர் கூற்றங்கோன் ஆளாக இருந்தான் என்பது அதிகாரியாக அல்லது ஆணத்தியாக இருந்தான் என்பதைக் குறிப்பதாக இருக்கலாம்.

முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் அரசு பதவிகள் வழிவழியாக வந்தவர்களுக்கு அளிக்கப்பெற்றதாகத் தெரிகிறது.[32] செப்பேட்டை எழுதிய பெரும்பணைக்காரனைப்பற்றிக் குறிக்கும்போதும், ஆணத்தியைக் குறிக்கும் போதும், செப்பேட்டுக் கவிதையைப் பாடிய புலவர்களைக் குறிப்பிடும் போதும் அவர்களின் முன்னோரும் பெரிதும் புகழப்படுகின்றனர்[33] அவர்களும் அரச பதவிகளில் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

சோழர்களின் தொடர்புக்குப் பின்னர் பாண்டிய அரசிலும் பலதரப்பட்ட அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். முக்கியமான அதிகாரி புரவுவரி திணைக்கள அதிகாரி ஆவார். இவ்வதிகாரிமூலம்தான் நிலம் விற்பதென்றாலோ, வாங்குவதென்றாலோ நடைபெறவேண்டும். நில விற்பனைக்காக எழுதப்படும் ஒப்புதல் ''நில விலைப் பிரமாண இசைவுதீட்டு'' எனவும், பணம் கொடுத்ததற்கான பற்றுச்சீட்டுக்குப் ''பொருள்மாவறுதி பொருட்செலவுஓலை'' எனவும் பெயர். இறுதியாகப் புரவுவரித் திணைக்களத்தில் பதிவு செய்துகொள்வதற்குப் ''பிரமாணம்'' என்றும் வழங்கப்பட்டுள்ளது.

'அரையர்' என்பார் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பாண்டியர் காலத்தில் முக்கிய இடத்தை வகித்திருக்கின்றனர். அரையர் என்றால் தலைவர் என்று பொருள். இவர்கள் சிறுசிறு பகுதிக்குத் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். இவர்களுள் ஒருவருக்கொருவர் பூசல் ஏற்பட்டதையும் பின்னர் சமாதானம் ஏற்பட்டு இனி எந்த வகையில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று தங்களுக்குள் ஒரு உடன்பாட்டுப் பத்திரம் எழுதிக் கொண்டதையும் கல்வெட்டுகள் பலபடத் தெரிவிக்கின்றன.[34]

அரசு அதிகாரிகளுக்கு ''ஏனாதி'', ''காவிதி'' போன்ற பட்டங்களும் சிறப்பாகத் 'தமிழவேள்' என்ற பட்டமும் தரப்பெற்றுள்ளன.[35]

நாட்டுப்பிரிவு

முதல் இராஜராஜன் காலம்முதல் பாண்டிநாடு என்றுதான் இப்பகுதி வழங்கிவந்தது. இராஜராஜன் காலத்தில் இராஜராஜ வளநாடு என்றும் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் இராஜராஜ மண்டலம் என்றும் பின்னர் இராஜராஜ பாண்டிநாடு என்றும் மாற்றம் பெற்றது. இந்நாட்டில் நாட்டுப்பகுதிகள் மண்டலம், கூற்றம், ஊர் என்று பிரிக்கப்பட்டிருந்தன. சோழர் காலத்துக்குப் பின்புதான் பாண்டியர் கல்வெட்டுகளில் வளநாடு என்று ஒரு பிரிவு காணப்படுகிறது. அதுவும் குறிப்பாக இராஜேந்திரன் காலத்துக்குப் பின்புதான். கூற்றம், நாடு குளக்கீழ், ஏரிக்கீழ், இருக்கை, முட்டம் என்பவை ஒரே பிரிவைக் குறிக்கும் சொற்களாகும். இவை பல்லவர் காலத்தில் நிலவிய கோட்டம் என்ற பிரிவை ஒத்ததாகும். முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்களின் செப்பேடுகளில் இன்ன கூற்றத்தில் படும் இன்ன ஊர் என்று குறிக்கப்படுகிறது. இதேபோன்று பல்லவர் செப்பேடுகளிலும் காணலாம். சோழர் காலத்தில் இருந்த சில வளநாடு, நாட்டின் பெயர்கள் பாண்டியர் காலத்தில் மாற்றப்பட்டன. முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து மூன்றாம் இராஜராஜன் காலம்வரை வழங்கிய 'பாண்டிக் குலாசனி வளநாடு' என்பது முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலிருந்து 'பாண்டிக்குலபதி வளநாடு' என்று மாற்றப்பட்டு வழங்கப்பட்டது. பாண்டிய மண்டலத்தில் சுமார் 100 நாடுகள் அடங்கியிருந்திருக்கின்றன. அவற்றில் அறுபது நாடு என்றும், பத்து கூற்றம் என்றும், பத்து குளக்கீழ் (ஏரிக்கீழ் என்ற ஒன்றையும் சேர்த்து) என்றும், நான்கு 'இருக்கை' என்றும், ஐந்து 'முட்டம்' என்றும், ஒன்பது வளநாடு என்று முடிகின்றன. வளநாடு என்பது பாண்டி நாட்டில் நாடு என்ற பகுதிக்குத்தான் முதலில் வழங்கிவந்தது. சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் இதை எடுத்து நாட்டை விடப் பெரிய பிரிவுக்குத் தன்னாட்டில் சூட்டி மகிழ்ந்தான். பின்னர் அவனது மகனான இராஜேந்திரன் காலத்தில் பாண்டி நாட்டிலும் வளநாடு என்று ஒரு பெரும்பிரிவு ஏற்படுத்தப்பட்டது.[36]

ஊராட்சி

தமிழகத்தில் ஊராட்சி முறையைப்பற்றித் தெரிவிக்கும் மிகவும் பழைமையான கல்வெட்டு பாண்டி நாட்டில் மானூர் என்னுமிடத்திலிருந்துதான் கிடைத்துள்ளது.[37] இக்கல்வெட்டு மாறஞ்சடையனின் 35ஆம்

ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. களக்குடி நாட்டுப் பிரமதேயமான நிலை நல்லூர் மஹாசபையார் ஒருங்குகூடித் தீர்மானித்த தீர்மானங்களைத் தெரிவிக்கின்றன. (1) அந்த ஊரில் பங்குடையாதின் மக்கள்சபையில் உறுப்பினராவதற்கு ஒரு தர்மம்உட்பட மந்திரபிரமாணம் நன்கு கற்றவராய் நன்னடத்தையுடையவராய் இருத்தல் வேண்டும். (2) ஒரு பங்குடையார் ஒருத்தர்தான் உறுப்பினராகலாம். (3) தான் வைத்திருக்கிற பங்கு விலையாகவோ, கொடையாகவோ அல்லது திருமணக் கொடையாகவோ பெற்றிருந்தால் தர்மம் உட்பட மந்திர பிரமாணத்தில் தேறியவராய், நன்னடத்தையராய் இருந்தால்தான் சபையின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டு செயலாற்றலாம். (4) இனி புதிதாக நிலம் விலைக்கு வாங்கியோ கொடையாகப் பெற்றோ அல்லது சீதனமாகப் பெற்றோ தமக்குப் பங்கு உண்டு என்று கூறிக்கொண்டு சபையில் உறுப்பினராக யாராவது விரும்பினால் அவர்கள் முழுசிராவணை அன்றி கால், அரை, முக்கால் சிராவணைப் பெற்றிருந்தால் அனுமதிக்கப்படமாட்டார்கள். (5) விலைக்கு நிலம் வாங்கிய பிறகு தாம் பங்குடையார் என்று வருபவர்கள் பரிஷிஷ்டத்தோடு முழுவேதத்தையும் தேறியவர்களாக இருத்தல் வேண்டும். (6) இது அல்லாமல் சபையில் உறுப்பினராகிறவர்கள் சபையின் தீர்மானப்படி சபையின் உரையாடலில் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். (7) இந்தத் தீர்மானத்தின்படி சிராவணை (பங்கு) இல்லாதார் எந்தவொரு வாரியத்துக்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படமாட்டார். (8) இந்தத் தீர்மானத்தை ஒத்துக்கொண்டவர்கள் யாவரும் பிறகு இல்லை என்று கூறக்கூடாது. தீர்மானத்துக்கு எந்தவித குந்தகமும் விளைவித்தல் கூடாது. (9) குந்தகம் விளைவிப்பாரும், குந்தகம் விளைவிப்பவர்களுக்குத் துணைநிற்பாரும் தலா ஐந்து காசு தண்டம் விதிக்கப்படுவர். தண்டம் செலுத்திவிட்டோம் என்று எண்ணாமல் அதற்குப் பிறகும் தீர்மானத்தை நன்கு கடைப்பிடித்தல்வேண்டும்.

மேலே குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்குப் பங்குடையாராகவும், மந்திரபிரமாணம், தர்மம் ஆகியவற்றில் தேர்ச்சி உடையராகவும், நன்னடத்தையுடையராகவும் இருத்தல் அவசியம் என்பது தெரியவருகிறது. அந்தப் பங்கு என்பது எவ்வளவு நிலம் என்று குறிக்கப்படவில்லை. அத்தோடு வயது வரம்பும் குறிக்கப் பெறவில்லை. தேர்தல் எந்தமுறையில் நடைபெற்றது என்பதும் தெரியவில்லை. சபையில் அங்கம் வகிப்பவர்களில் இருசாரார் இருந்தனர் என்பது தெரிகிறது. ஒரு சாரார் வெறும் உரையாடலில்மட்டும் கலந்துகொள்வர். அவர்கள் தங்கள் விருப்பங்களைக் கூறலாம். சில ஆலோசனைகளைக் கூறலாம். ஆனால் அவர்கள் எந்தவித வாரியத்துக்கும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். இதிலிருந்து அவர்கள் தற்காலச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் போன்று இருந்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. தற்காலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தை மேலவை உறுப்பினர்கள் விவாதித்து சில ஆலோசனைகளைக் கூறலாமேயொழிய அதை நிறைவேற்றாமல் தடுத்துவிட அதிகாரம் இல்லை. அதைப்போன்று விவாதித்து ஆலோசனைகளைக் கூறுவதற்குமட்டும் அவர்கள் தகுதி உடையவர்களாக இருந்திருக்க வேண்டும்.

மற்ளுெரு சாரார் வாரியங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடையவர்கள். அவர்களுக்குத்தான் அதிக அதிகாரம் இருந்திருக்கவேண்டும். அவர்கள் இக்காலச் சட்டமன்ற உறுப்பினர்கள் போன்று இருந்திருக்கலாம். அவ்வாறெனில் அக்காலத்திய மஹாசபை தற்காலத்தியச் சட்டமன்றம் போன்று இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சோழர் காலத்தில் இருந்ததுபோல் கி. பி. 9ஆம் நூற்ருண்டிலேயே வாரியங்கள் இருந்ததுவும் இக்கல்வெட்டால் உணர முடிகிறது. ஆனுல் சோழர்கள் காலத்தில்கூட நிலவிடாத ஒரு சிறந்த ஊராட்சி முறை (இருசாரார் தேர்ந்தெடுக்கும் முறை) பாண்டியர் காலத்தில் நிகழ்ந்திருக்கிறது என்பது பாராட்டுதற்குரிய ஒன்ருகும்.

இக்கல்வெட்டில் இவ்வூர் பங்குடையார் மக்கள் சபையில் மன்ருடுகிறது என்று வரும் தொடரை டாக்டர் கே. வி. இராமன் அவர்கள் ''பங்குடையார், மக்கள் சபையில் மன்ருடுகிறது'' என்று பிரித்து 'மக்கள் சபை' என்ற சொல் தமிழகத்தில் கி. பி. 9ஆம் நூற்ருண்டிலேயே வழங்கி வந்திருக்கிறது என்று கூறியுள்ளார்.[38] முன்னர் பதிப்பித்த திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்[39] மக்கள் என்று வருவதற்குத் தனியாக ஒரு பொருள் கொள்ளாது பங்குடையார் என்ற சொல்லோடு சேர்த்துப் (Share - holders) பொருள் கொண்டுள்ளார். ஆனுல் அதைப் பங்குடையார் மக்கள், சபையில் மன்ருடுறது என்று பிரித்துப் பொருள் கொள்ளுதல் சிறப்பாகத் தெரிகிறது. 'மக்கள்' என்பதைப் 'பெருமக்கள்' என்று கொள்ளலாம். பிற்காலக் கல்வெட்டுகளில் 'பெருங்குடிப் பெருமக்கள்' [40], 'கணப்பெருமக்கள்'[40A], 'வாரியப் பெருமக்கள்'[41] என்று ஆளப்படுவதைக் காணலாம். அதைப்போன்றே இக்கல்வெட்டும் பங்குடையார் மக்கள் என்று குறிப்பதாகக் கொள்ளலாம்.

**வரிவசூல்**

இவர்கள் காலத்தில் வரிவசூல் எந்த அளவில் (ஆறில் ஒன்ருகவா அல்லது ஐந்தில் ஒன்ருகவா) வசூலித்தார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் நிலங்களைத் தரம் பிரித்து அதன் விளைவுக்கேற்ப வரிவசூல் செய்ததாகத் தெரிகிறது. ஒரு மா நிலத்துக்கு 1/4 காசு பணமும் 4 கலம் நெல்லும் வரியாக வசூலித்ததாக வீரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு மூலம் புலனுகிறது. மாறவர்மன் குலசேகரன் காலத்தில் நிலவிய வார முறையைத் தஞ்சைமாவட்டம் ஆலங்குடியிலிருந்த கல்வெட்டால் உணரலாம்.[41A] விளைந்த நெல்லில் வேலையாட்கள், காவற்காரர்களுக்கான கூலி நெல், கட்டு நெல் (வரி) முதலியவை முதலில் பொதுவில் கொடுத்துத் தீர்க்கப்படும். மீதி நெல்லில் கால்பாகம் நிலச் சொந்தக்காரர் வாரமாக எடுத்துக் கொள்ளலாம். வைக்கோலை ஆளுக்குப் பாதிபாதியாகப் பிரித்துக் கொள்ளலாம். மஞ்சள், ஆமணக்கு, பருத்தி, எள்ளு போன்ற புஞ்சைப் பயிருக்கு விதைப்புக்கு வேண்டிய செலவைக் கொடுத்து விளைச்சலில் பாதியை வாரமாக நிலச் சொந்தக்காரர் பெற்றுக்கொள்ளலாம். அணையைச் செப்பனிடுதல், குரம்பு (வயல் வரப்பு) கட்டுதல் போன்றவற்றை உழுபவன் செய்தல்வேண்டும். நிலக்கிழார் வீட்டில் மேல்வார நெல்லைக்கொண்டு சேர் கட்டித் தரவேண்டும் என்று எல்லாவற்றையும் தெள்ளத்தெளிவாக இயம்புகிறது. இவ்வாறு நிலக்கிழாரும் நிலம் பயிரிடு

பவனும் ஒத்துக்கொண்டு ஒரு உறுதிப்பத்திரம் எழுதிக்கொள்வதைக் 'காணிபிடிபாடு'[42] என்று கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கோயில் நிலங்களைப் பொறுத்தமட்டில் எந்த வகையில் வாரம் தரப் பெற்றது என்பதைச் சில கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. சுந்தர பாண்டியனின் பதினோராம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டொன்று ஒரு மா தேவதான நிலத்துக்கு மூன்றுகலம் நெல்லோ அல்லது அன்று தேவ தான நிலங்கள் எவ்வளவு வழங்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதோ அதில் பாதியோ இருக்கவேண்டும் என்று கூறுகிறது.[43] மற்றொரு கல் வெட்டும் அதே அளவைத் தெரிவிகிறது.[44] ஒரு மாநிலத்துக்கு மூன்றுகலம் நெல் என்று வசூலிப்பதானால் ஒவ்வொரு மா நிலத்திலும் 40 கலம் நெல் விளைந்திருக்க வேண்டும் என்று அறுதியிடுகிறது. ஒரு மா நிலத்தில் 40 கலம் நெல் விளைந்திருந்தால்தான் அந்நிலம் 3 கலம் நெல்லை வரியாகத் தரவேண் டும். அவ்வாறு அல்லாமல் விளைவில் குறைந்திருந்தால் வரியும் குறைத்து வசூலிக்கப்பட்டிருக்கும் போன்று தெரிகிறது.

வரிவசூலில் ஊழல்

நிலங்களின் தரம் பிரித்தும், விளைவுக்கேற்பவும் வரிவசூல் செய்த போதிலும் சில நேரங்களில் விவசாயிகள் வரிதர இயலாத நிலை ஏற் பட்டும் அந்த நெருக்கடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக வரிவசூல் செய்யும் அதிகாரிகளைச் சமாதானம் படுத்துவதற்காகச் சில பொருள்களைக் கையூட்டாக அளித்திருக்கக்கூடும் என்பது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (சு. கி. பி. 1251) கல்வெட்டொன்றால் புலனாகிறது.[45] அரசனது அதிகாரிகளைச் சென்று கண்டு சமாதானப் படுத்திவிட்டு வருவதற் காகத் தங்களுக்கு விதிக்கப்பெற்றிருந்த வாரப்பற்று கடமைப்பற்று நெல்லி லிருந்து சிறிது எடுத்து உபயோகப்படுத்தியதாக அக்கல்வெட்டுக் கூறுகிறது. இதுபோன்று சென்று அதிகாரிகளைக் கண்டதால் நன்மைகள் நேர்ந்திருக் கக் கூடும் போன்று மற்றொரு கல்வெட்டால் அறியமுடிகிறது. முன் விதிக்கப்பெற்றிருந்த அளவு வரி செலுத்த இயலாது துன்பப்பட்டபோது மன்னனின் புதிய ஆணையால் வரிவிதிப்பு அளவுமாற்றம் செய்யப்பட் டிருக்கிறது.[46]

வரிகொடா இயக்கம்

சில நேரங்களில் எவ்வளவு தளர்த்தப்பட்டாலும் வரி செலுத்த இய லாத நிலையில் விவசாயிகள் இருந்திருக்கிறார்கள். அவ்வாறான சமயங்களில் மக்கள் இங்கு வாழ்வதைவிடக் காடுகளில் வாழ்வது மகிழ்ச்சி தரக்கூடியது என்று மிகவும் மனம் வருந்தி எண்ணியிருக்கிறார்கள்.[47] சில சமயங்களில் வரி செலுத்த இயலாத சூழ்நிலையில் பயிரிடாது ஊரைவிட்டே வெளியேறிப் போயிருக்கிறார்கள் என்பதைத் திருச்சி மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ள மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு உணர்த்துகிறது.[48] உறத்தூர்க் கூற் றத்தைச் சேர்ந்த மருதூர் என்ற ஊர் மன்னனின் ஆறாவது, ஏழாவது ஆண்டு களில் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தவில்லை. ஏன் செலுத்தவில்லை என்று விசாரிக்கையில் அவ்வூர் மக்கள் நிலங்களைப் பயிரிடாமல் வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டதாக அறியப்படுகிறது. உடன் அவ்வரியை

உறத்தூர் கூற்றத்தார் செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு மேலும் ஒரு சுவையான செய்தியைத் தெரிவிக்கிறது. ஒரு விவசாயி தான் செலுத்தவேண்டிய வரியை மன்னனின் இருபத்திரண்டாம் ஆட்சி ஆண்டுவரை செலுத்தாமல் இருந்துவிட்டு ஊரைவிட்டே ஓடிவிடுகிறான். அவனுக்குப் புணையாகக் கையெழுத்திட்டிருந்த மற்றொருவனை அவ்வரியைச் செலுத்த வற்புறுத்தப்படுகிறது. அவனும் ஊராரும் சேர்ந்து வரி செலுத்தாமல் ஓடிப்போனவனின் வீட்டையும் நிலத்தையும் ஒரு கோயிலுக்கு விற்று அதிலிருந்து கிடைத்த பணத்தை வரியாகச் செலுத்தினர் என்று ஜடாவர்மன் சுந்தரபாண்டியனைச் சார்ந்த அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[49]

படை :

முதற்பிரிவைச் சார்ந்த பாண்டியர்கள் காலத்தில் உத்தரமந்திரியாக இருந்தவனே மஹா சாமந்தனாகவும் இருந்திருக்கிறான். இச்சாமந்தன் என்பவன் இக்காலப் படைத் தளபதி போன்றவன். இந்தப் பதவி ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே தரப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் நிகழும் இராணுவப் புரட்சி போன்று ஏதும் செய்யாது அரசனிடத்தில் மிகவும் நன்றியுணர்வோடு மஹா சாமந்தர்கள் இருந்த காரணத்தால் தலைமுறை தலைமுறையாக அவன் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே தரப்பட்டது போன்று தெரிகிறது.

சடையவர்மன் நெடுஞ்சடையன் காலத்தில் சாத்தன் கணபதி, அவனது தம்பி எட்டிசாத்தன் போன்றோரும் இரண்டாம் வரகுணவர்மன் காலத்தில் நக்கன் புள்ளனும் அவனது மகன் புள்ளன் நக்கனும் படைத் தளபதிகளாக விளங்கியிருக்கிறார்கள்.

பாண்டியர் காலத்தில் நால்வகைப் படை இருந்ததாகத் தெரிகிறது. இதனை வடமொழியில் ''இரத கரி துரக பதாதி'' என்று கூறுவர். அதாவது தேர், யானை, குதிரை, காலாள் படை என்பதாகும். சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் இராஜசிம்மன் 'சென்றஞ்சை காவலனது கரி துரக பதாதிகளைச் [50] செங்களத்தில் மடிவித்தான்' என்று கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் தஞ்சை மன்னனின் படை கூறப்பட்டாலும் அதைப்போன்றே பாண்டிய மன்னனிடத்தும் இருந்திருக்கும் என ஊகிக்கலாம். மேற்கூறப்பெற்றிருப்பதில் இரதம் கூறப்பெறவில்லை. ஆனால் வேள்விக்குடிச் செப்பேட்டில் 'நாற்பெரும் படையும் பாற்பெடற் பரப்பி'[51] என்ற தொடர் வருவதால் பாண்டியர்கள் நான்கு பெரும் படையும் பெற்றிருந்தார்கள் என்று துணியலாம். சீவரமங்கலச் செப்பேடு பராந்தக நெடுஞ்சடையன் ஆய்மன்னனை வென்றதைக் குறிப்பிடுகையில் 'மாயிரும் பெரும்புனற் காவிரி வடகரை ஆயிர வேலி அயிரூர் தன்னிலும் புகழி யூரிலுந் திகழ்வே லதியனை ஒருபுறங் கண்டவ னொலியுடை மணித்தேர் ஆடல் வெம்மா வவையுடன் கவர்ந்தும்'' என்று அதியனின் மணித்தேர், குதிரைப்படை ஆகியவைகளைத் தெரிவிக்கிறது.[52] தளவாய்புரச் செப்பேடு பராந்தக வீரநாராயணனைக் குறிப்பிடுகையில் 'விரைபரித்தேர் வீரநாராயணன்'[53], 'தேர்மிகு மா கடற்றானை தென்னவர் கோன்' என்று குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கத்தக்கது.

போரில் வேல், வாள், வில், அம்பு போன்றவை பயன்படுத்தப்பட்டன. சீவரமங்கலச் செப்பேடு 'கொற்றவேலை உறை நீக்கி, வெற்றத்தானை வேண் மன்னனை வென்றழித்து' என்று குறிப்பிடுவதால் வேல் போரினில் பயன்படுத்தப்பட்டதென்பதும் பயன்படுத்தாத காலங்களில் உறையினில் இட்டு வைக்கப்பெற்றிருந்ததும் புலனாகிறது. 'சிலைத் தடக்கை கொலைக் களிற்றுச் செழியன்' என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுவதாலும், 'தலையாலங்கானத்திற்றன்னொக்கு மிருவேந்தரைக் கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும்' என்று சின்னமனூர்ப் பெரிய செப்பேடு கூறுவதாலும் வில் அம்பும் வாளும் போரில் பயன் படுத்தப்பட்டன என்பது அறியற்பாலதாம்.

வெற்றி பெற்ற களிப்பால் போர்வீரர்கள் 'கவந்தத் தினாடலுங்க கூகையின் பாடலுங் கண்டுங்க கேட்டும்' மகிழ்ந்தார்கள் என்பதும், 'கருங்கூந்தல் வெள்ளெயிற்றுச் செவ்வாய்ப் பொற் சூலக்கைவல்லி' யான கொற்றவைக்குப் போர்க்களத்தில் பலி இட்டனர் என்பதும் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் மெய்க்கீர்த்தியால் அறியமுடிகிறது. மன்னனின் வெற்றியைப் புலவர்கள் பரணி பாடினர் என்பதை 'வீரமுழுதெடுத்துப் பாடும் பரணி தன் பார்வேந்தர் கேட்பிக்க' என்று அம்மெய்க்கீர்த்தியில் வரும் தொடரால் அறியலாம்.

நடுகல்

முதற்பிரிவைச் சார்ந்த பாண்டியர்களின் சமகாலத்தவரான பல்லவர்கள் காலத்திய நடுகற்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. ஆனால் பாண்டிய மன்னர்கள் காலத்தியது மிகக் குறைவாகவே விரல்விட்டு எண்ணக்கூடிய விதத்திலேயே கிடைத்திருக்கின்றன. பல்லவர் காலத்தில் பெரும்பாலும் அவர்களின் கீழ் ஆண்ட சிற்றரசர்களுக்குள் ஏற்பட்ட போரில் வீழ்ந்துபட்ட வீரமறவருக்கு எடுக்கப்பட்ட கற்கள்தான் உள்ளன. அதைக் கொண்டு பார்ப்போமென்றால் பாண்டியர் காலத்தில் ஆய் மன்னர்களைத் தவிர வேறுயாரும் பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்ததாகத் தெரியவில்லை. சிலசமயம் முத்தரையர்களும், பொடும்பானூர் வேளிர்களும் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் நிலையாக அவர்களிடத்தில் சிற்றரசர்களாக இருக்கவில்லை. பாண்டியர்களிடம் சில சமயமும், பல்லவர்களிடம் சில சமயமும் சிற்றரசர்களாக இருந்திருக்கின்றனர். எனவே பாண்டியர் காலத்தில் அவர்களின் சிற்றரசர்களுக்குள் போர் மூள வழியில்லாமற் போய்விட்டது. அதன் காரணமாக நடு கற்கள் எழுப்ப அவசியமில்லாமல் இருந்திருக்கலாம்.

பாண்டியர் காலத்திய நடுகற்கள் இதுவரையில் நான்கு கிடைத்துள்ளன. இரண்டு கேரளத்தைச் சேர்ந்த விழிஞத்திலிருந்தும்[54] (இப்பொழுது பத்மநாபபுரத்திலுள்ள அரண்மனையில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது) மற்றொன்று திருநெல்வேலி மாவட்டத்தில் கழுகுமலையிலிருந்து[55] நான்காவது வடார்க்காடு மாவட்டம் காந்தப்பாளையத்திலிருந்தும்[56] கிடைத்துள்ளன.

விழிஞத்திலிருந்து கிடைத்திருக்கும் இரண்டு நடுகற்களில் முதலாவது, கரைக்கோட்டை என்ற இடத்தைச் சேரரது படை தாக்கியபோது கொழு

லூர்க் கூற்றத்தைச் சேர்ந்த பெருமூர் என்ற ஊரை ஆளும் இரணகீர்த்தி என்பானின் உள்வீட்டுச் சேவகனான நாதம்பெருந்தினை என்பான் வீரமரணம் எய்தியதைத் தெரிவிக்கிறது.

இரண்டாம் நடுகல் தமிழில் பாவடிவில் எழுதப்பட்டுள்ளது. விழிஞத்தைக் கைப்பற்றியபோது, தனது செஞ்சோற்றுப் பெருங்கடனைத் தீர்ப்பதற்காக ஒரு போர்வீரன் இறுதிவரை போராடி உயிர் நீத்தான் என்பதைக் காட்டுகிறது. போர்வீரர்கள் அனைவரும் தங்கள் மன்னன்பால் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பதும், அவர்கள் எந்த அளவுக்கு நன்றி உணர்வோடு விளங்கினார்கள் என்பதும் ஈண்டு பெரிதும் உணரற்பாலது.

கழுகுமலை நடுகல் மாறஞ்சடையன் காலத்தியது. பாண்டியரது படை மலைநாட்டை ஆட்சி செய்த கருநந்தனாரைத் தாக்கி அவரின் அருவியூர்க் கோட்டையை அழித்தபோது பெருநெச்சுரத்தைச் சேர்ந்த எட்டி மன்னனாயின மங்கலஏனாதியின் உள்வீட்டுச் சேவகர் இருவர் உயிர் துறந்ததைக் குறிக்கிறது. இறந்த வீரர் இருவரில் ஒருவன் தொண்டை நாட்டைச் சேர்ந்த பூந்தண்மலியைத் தனது ஊராகக் கொண்டவன். அவனது பெயர் வினையந்தொழுகூரன். மற்றவன் பேரெயிற்குடியைச் சேர்ந்த சாத்தன் நக்கன்.

காந்தப் பாளையத்திலிருந்து கிடைத்துள்ள நடுகல் செவ்வனத்தான் மாலை உடையான் அஞ்ஞாண்டை ஆன வன்னிய நாடாழ்வான் மகள் திருமலை அழகியார் என்பவர் சமுத்திரம் போன்ற சேனையைத் தாக்கி அவர்களிடமிருந்து ஆநிரைகளைக் கவர்ந்து வருகையில் இறந்துவிட்டபொழுது அவருக்காக எடுக்கப்பட்டதாகும். இது விக்கிரம பாண்டியனின் நான்காம் ஆட்சி ஆண்டில் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த விக்கிரம பாண்டியன் எந்த நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவன் என்பது புரியவில்லை. எழுத்தமைதியைக் கொண்டு பெரும்பாலும் கி. பி. 14–15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம்.

### பட்டான்பற்றிய பாறைக் கல்வெட்டு

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திர வட்டம் சிங்கப்பட்டி என்ற ஊரின் வயல் நடுவில் உள்ள ஒரு பாறையில் வட்டெழுத்தில் ஒரு கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு கி. பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். ஐய்யாரன் என்பவன் சாத்தன் என்பானோடு பொருது இறந்ததைத் தெரியப்படுத்துகிறது.[57]

### பிற்காலப் பாண்டியர் காலத்து நடுகற்கள்

பிற்காலப் பாண்டியர் காலத்தில் நடுகற்கள் சில திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் இலவேவங்கல் என்னும் ஊரிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை திருநெல்வேலிப் பெருமாளுக்காகக் குந்தையன் கோட்டையைச் சேர்ந்த வீரமறவர்கள் சிலர் எதிரிகளின் குதிரைகளைக் குத்தி வீரமரணம் எய்தியதைத் தெரிவிக்கின்றன.[57A]

**படைத்தலைவன்**

கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததும் அதற்குப் பிற்காலத்ததும் ஆன கல்வெட்டுகளில் படைத்தலைவன் என்ற அடைமொழியோடு சிலர் குறிக்கப்படுகின்றனர். உதாரணமாக படைத்தலைவன் காடம்பட்டன், படைத்தலைவன் தனியன்முண்டன், படைத்தலைவன் சாத்தன் தேவன் போன்று பலர் குறிக்கப்பட்டுள்ளனர். படைத்தலைவன் என்றால் சேனைத் தலைவர் (Chief of an army) என்று கொள்ளலாம். படைத்தலைவர்களாகக் குறிக்கப்பட்டிருப்பவர்கள், பெரும்பாலும் பிறர் தந்த ஆடுகளைப் பெற்றுக் கொண்டு அவைகளின்மூலம் கிடைக்கும் நெய்யை ஒரு குறிப்பிட்ட அளவில் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குத் திருநந்தாவிளக்குக்கு அளிப்பதற்கு ஒத்துக்கொண்டு அவ்வாறே செய்து வந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் போர் அல்லாத அமைதியான காலங்களில் கோயில்களில் நெய் அட்டும் பணியை மேற்கொண்டார்கள் என்று கருதலாம்.

பெரும்பாலான கல்வெட்டுகளிலிருந்து பார்க்கையில் நெய் அட்டுவதற்கு ஆடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் இடையர்களாகத்தான் காணப்படுகிறது. இதற்குச் சிறந்த உதாரணம் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணப்பெறும் இராஜராஜன் காலத்தியக் கல்வெட்டுகளாகும்.[58] ஒருசில கல்வெட்டுகள் இவர்கள் ‘வெட்டிகுடி’ யைச் சார்ந்தவர்கள் என்று கூறுகின்றன.[59] வெட்டிகுடி என்பது வேட்டுவகுடியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். முல்லை நிலப்பகுதியில் மாடு, ஆடுகளை வளர்த்து வந்த ஒரு இனத்துக்கு வேட்டுவஇனம் என்று வழங்கிவந்திருக்கிறது. அதே இனம் பிற்காலத்தில் இடையர் என்றும், கோனார் என்றும் மாறி வழங்கியிருக்கிறது. இந்த வேடுவர்கள் தங்கள் ஆநிரையை மற்றவர்கள் கவர்ந்து செல்லும் போது போரிட்டு மீட்கையில் வீரமரணம் எய்தியிருக்கின்றனர் என்பதைக் கல்வெட்டுகளால் அறிந்துகொள்ள முடிகிறது.[60] எனவே வெட்டிகுடியைச் சார்ந்தவர்கள் இடையர்கள்தாம் என்பதும் அவர்கள் போர்வீரர்களாகவும் தலைவர்களாகவும் விளங்கியிருந்தனர் என்பதுவும் போரில்லாத அமைதிக் காலங்களில் கோயில்களில் நந்தாவிளக்கு எரிவிக்க நெய் அட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் போதரும்.

## உசாவியவை


1. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக்கம் 1-48; Epigraphia Indica Vol. XVII, pp. 291-309.
2. Ibid, pp. 49-70; The Indian Antiquary Vol. No. XXIII, 1893.
3. Ibid, pp. 71-82; South Indian Inscriptions, Vol. III, part iv, No. 205.
4. Ibid, pp. 83-140.
5. Ibid, pp. 141-176; S. I. I. Vol. III, part iv, No. 206.
6. Ibid, pp. 177-206.
7. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக்கம் 185.
8. Epigraphia Indica Vol. VIII, p. 317ff, No. 1; S. I. I. Vol. XIV, No. 1.
9. S. I. I. Vol. XIV, No. 22.
10. Epi. Indica Vol. XXXVIII, pp. 27-32.
11. பாண்டியர் செப்பேடுகள் பத்து; கருநந்தடக்கனின் பார்த்திவசேகர புரச் சாசனம் பக்கம் அ- 1- அ-18; திருப்பறப்புச் சாசனம், பக்கம் அ-19-அ-23; பாலியத்துச் சாசனம், அ-24-அ-34, விக்கிரமாதித்திய வரகுணவர்மனின் திருநந்திக்கரைச் சாசனம், பக்கம் அ-35-அ-39.
12. பா. செ. ப. வேள்விக்குடிச் சாசனம், பக்கம் 23, வரிகள் 46, 51.
13. மாறவர்மன் அரிகேசரி, 'அரிகேசரி, அஸமஸமன், ஸ்ரீதாரம்மன், போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தான், வேள்விக்குடிச் செப்பேடு, வரி 62.
14. பாண்டியர் வரலாறு, சதாசிவ பண்டாரத்தார், 1969, பக்கம் 110; A. R. E. 55 of 1916, 540 of 1916.
15. S. I. I. Vol. V, No. 446, 421.
16. பா. செ. ப. சின்னமனூர் (பெரிய) சாசனம், பக்கம் 157, வரி 146-147.
17. S. I. I. Vol. XIV, No. 12, 12-A, 12-B, 13.
18. Ep. Indica Vol. XXVIII, pp. 85ff, A. R. Ep., 1946-47, App. B. Nos. 35a.
19. A. R. E. 32/1937-38; 33/1937-38, see **சோழர் காலக் கல்வெட்டுகளில் யாண்டு இதனெதிராமாண்டு** ஆராய்ச்சி 17.
20. பா. செ. பத்து, சிவகாசிச் சாசனம், பக்கம் 191, வரிகள் 54-55.
21. பாண்டியர் வரலாறு, டி. வி. சதாசிவபண்டாரத்தார், பக்கம் 213.
22. இரா. நாகசாமி, எம். ஏ., யாவரும் கேளிர், பக்கம் 99-100.
23. பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழக வெளியீடு.

24. பா. செ. ப. வேள்விக்குடிச் சாசனம், பக்கம் 31, வரிகள் 132-134.
25. பா. செ. ப. ஸ்ரீவரமங்கலச் சாசனம், பக்கம் 61, வரிகள் 75-81.
26. பா. செ. ப. ஸ்ரீவரமங்கலச் சாசனம், பக்கம் 60, வரிகள் 72-75.
27. பா. செ. ப. சின்னமனூர்ச் (சிறிய சாசனம்), பக்கம் 77, வரிகள் 31-33.
28. S. I. I. Vol. XIV, 51, foot note 2A.
29. பா. செ. ப. தளவாய்புரச் செப்பேடு, பக்கம் 109, வரிகள் 158-161.
30. Ibid, p. 110, வரி 166.
31. Ibid, p. 158, 159, வரி 163-167.
32. "Evidently, the office of the ministership under Pandya rulers was a hereditary one" H. Sarkar, the battle of Vaikai- A Re-assessment; in The Journal of Indian History Volume LI, part I, April, 1973.
33. பா. செ. ப. தளவாய்புரச் சாசனம், பக்கம் 115, வரிகள் 228-238.
34. I. P. S. No. 484.
35. S. I. I. Vol. XIV, No. 87.
36. See the article 'Some Reflections on Pandi Mandalam C 700-1300' by Y. Subbarayalu in Damilica Vol. II, part 3, p. 27.
37. Epigraphia Indica Vol. XXII, pp. 9-11.
38. K. V. Raman, Some aspects of Pandyan History in the light of recent discoveries, p. 42.
39. Ep. Ind. Vol. XXII, p. II.
40. No. 231 of S. I. I. Vol. XIX; No. 2 of S. I. I. XIX.
40A. S. I. I. Vol. XIX, No. 22, 127.
41. உத்தரமேரூர்க் கல்வெட்டு, Epi. Ind. Vol. XXII, No. 24.
41A. A. R. E. 1936-37, 41B. A. R. E. 509 of 1920.
42. A. R. E., 1921, part II, para 28.
43. Ibid, 409 of 1914.
44. Ibid, 1924, part II, para 38.
45. Ibid, 8/1913.
46. Ibid, 1924, part II, para 31.
47. K. A. Nilakanta Sastri, Pandyan Kingdom, page 194.
48. A. R. E. 357 of 1922.
49. Ibid, 93 of 1911.
50. பா. செ. பத்து, சின்னமனூர்ப் பெரிய சாசனம், பக்கம் 157, வரி 136.

51. Ibid, *வேள்விக்குடிச் சாசனம், பக்கம் 27, வரிகள் 91–92.*

52. Ibid, *ஸ்ரீவரமங்கலச் சாசனம், பக்கம் 57, வரிகள் 24–27.*

53. Ibid, *தளவாய்புரச் சாசனம், பக்கம் 105, வரிகள் 115–116.*

54. Indian Archaeology, 1958–59, p. 471, T. A. S. Vol. I, p. 153ff.

55. S. I. I. Vol. XIV, No. 31.

56. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தருமபுரி மாவட்டத்தில் கல்வெட்டு ஆய்வு செய்தபோது கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு இன்னும் பதிப்பிக்கப்படவில்லை.

57. S. I. I. Vol. XIV, No. 97.

57A. A. R. E. 1939–40, p. 253.

58. S. I. I. Vol. II, No. 63, 94.

59. Ibid, Vol. XIV, No. 84.

60. Cengam hero – stones, Edited by R. Nagasamy, inscription No. 1971/39.